DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU</u>**

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 34 of 2024 PW : 7

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு.கண்ணப்பரெட்டி

Father's Name : திரு.நாராயணசாமி ரெட்டி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 75

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.05.2026

**தேதி..15.05.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.7. திரு.கண்ணப்பரெட்டி , த/பெ. திரு.நாராயணசாமி ரெட்டி வயது 75 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்**

முதல் விசாரணை

நான் தற்போது கொள்ளப்பள்ளி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ 5 குறியீடு செய்யப்படுகிறது**. மேற்கண்ட கையொப்பத்தை நான் 27/12/2023 காலை 11.30 அல்லது 12.00 மணியளவில் முனுசாமிநாயுடு கண்டிகை பேருந்து நிறுத்தத்தில் வைத்து போட்டேன். அப்பொழுது ஆஜர் எதிரியை போலீசார் கைது செய்தனர் அதற்காக என்னிடம் மேற்கண்ட கையொப்பத்தை பெற்றனர். அப்போது இவ்வழக்கில் சாட்சி 2 ஜீவரத்தினம் என்பவரை ஆஜர் எதிரி அடித்ததாக தெரிவித்தார். அதற்கு நானும் தனஞ்செயலு என்பவரும் கையொப்பம் செய்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் ஊர்க்காரர் என்பதால் பல ஆண்டுகளாக தெரியும். எதிரி மீது வேறு ஏதேனும் வழக்கு உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜீவரத்தினம் என்பவரை சிறுவயது முதல் எனக்கு தெரியும். 26.12.2023 அன்று மாலை 5.00 மணிக்கு நான் எங்கு இருந்தேன் என்றால் நான் புத்தூருக்கு சென்றிருந்தேன். மீனாவின் கணவர் லோகேஷ் என்பவரை எனக்கு தெரியாது. ஜீவரத்தினம் என்பவரும் ஆஜர் எதிரியும் உறவினர்கள் தான். சாட்சி தனஞ்செழியனும் ஆஜர் எதிரியும் பங்காளிகள் என்றால் சரிதான். தனஞ்செழியனும் லோகேஷ் என்பவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். ஜீவரத்தினம் என்பவரின் வீட்டின் இடது பக்கத்தில் ஆண்டாளம்மாள் என்பவர் வீடு உள்ளது என்றால் சரிதான். ஆண்டாளம்மாள் வீட்டின் எதிரே பிரகாஷ் என்பவரின் வீடு உள்ளதா என்றால் சற்று தொலைவில் உள்ளது. நான் எனது

முதல் விசாரணை சாட்சிய சங்கதியை போலிசார் என்னை விசாரித்தபோது நான் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் கையொப்பம் செய்த தாளில் ஏற்கெனவே எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. கையொப்பத்தை நான் வீட்டில் வைத்து போட்டேன். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

**மறுவிசாரணை – இல்லை.**

**ஒப்பம் – K. வெங்டேசன், B.A., B.L.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**

**பள்ளிப்பட்டு(FAC)**